**(சுருக்கம்)**

திருத்திய ஊதிய விகிதங்கள், 2009 – ஒரு நபர் குழுவின் பரிந்துரைகள் – சில வகைப்பணியிடங்களின் ஊதிய விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட ஊதிய முரண்பாடுகள் – திருத்தியமைத்து ஆணையிடப்படுகிறது.

---

**நிதி (ஊதியப் பிரிவு)த் துறை**

அ.ஆ.நிலை எண்.71

நாள்: 26–2–2011.
மாசி–14.
திருவள்ளுவர் ஆண்டு–2042.

**படிக்கவும்:–**

1. அரசாணை நிலை எண்.234, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 1–6–2009.
2. அரசாணை நிலை எண்.444, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 9–9–2009.
3. அரசாணை நிலை எண்.257, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
4. அரசாணை நிலை எண்.259, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
5. அரசாணை நிலை எண்.263, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
6. அரசாணை நிலை எண்.277, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
7. அரசாணை நிலை எண்.279, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
8. அரசாணை நிலை எண்.283, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
9. அரசாணை நிலை எண்.287, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
10. அரசாணை நிலை எண்.288, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
11. அரசாணை நிலை எண்.290, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
12. அரசாணை நிலை எண்.300, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
13. அரசாணை நிலை எண்.303, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
14. அரசாணை நிலை எண்.305, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
15. அரசாணை நிலை எண்.312, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
16. அரசாணை நிலை எண்.315, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
17. அரசாணை நிலை எண்.317, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
18. அரசாணை நிலை எண்.324, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
19. அரசாணை நிலை எண்.331, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
20. அரசாணை நிலை எண்.335, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
21. அரசாணை நிலை எண்.448, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 31–12–2010.
22. அரசாணை நிலை எண்.449, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 31–12–2010.
23. அரசாணை நிலை எண்.450, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 31–12–2010.
24. அரசாணை நிலை எண்.451, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 31–12–2010.

25. அரசாணை நிலை எண்.452, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 31–12–2010.
26. அரசாணை நிலை எண்.45, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 10–2–2011.
27. வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டாட்சியர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் இணை ஆணையர்கள் (இந்து சமய அறநிலையத் துறை) ஆகியோர்களிடமிருந்து பெறப்பட்ட முறையீடுகள்.

*****

**ஆணை:–**

மைய அரசின் ஆறாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியதன் தொடர்ச்சியாக அலுவலர் குழு, 2009 அமைக்கப்பட்டு மாநில அரசு அலுவலர்களுக்கும் இக்குழுவின் பரிந்துரைகளின்படி பழைய ஊதிய விகித ஏற்றமுறைக்கு நிகரான புதிய ஊதிய விகித ஏற்ற முறையில் திருத்திய ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டு 1–1–2006 முதல் கருத்தியலாகவும் 1–1–2007 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. அலுவலர் குழுவின் பரிந்துரைகளின்படி உதவிப் பொறியாளர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களின் பழைய ஊதிய விகிதமான ரூ.6500–11100 மற்றும் ரூ.6500–10500–க்கு நிகரான திருத்திய ஊதிய விகிதமாக முறையே ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4700 மற்றும் ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4600 நிர்ணயம் செய்யப்பட்டது. எனினும் அமைச்சுப் பணி கண்காணிப்பாளர்களின் திருத்திய ஊதிய விகிதம் ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4800 அனுமதிக்கப்பட்டதை துணை வட்டாட்சியர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடங்களுக்கும் நீட்டிக்கப்பட்டதால் அதன் உயர் பணியிடங்களான வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4900 என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் அதுசமயம் கண்காணிப்பாளர்களைவிட கூடுதல் தர ஊதியம் அதாவது ரூ.4700 பெற்று வந்த உதவிப் பொறியாளர்களுக்கு ஊதிய விகிதம் மாற்றப்படவில்லை.

3. உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி அமைச்சுப்பணி கண்காணிப்பாளர்களின் ஊதிய விகிதம் அலுவலர் குழுவின் பரிந்துரையின்படி திருத்தியமைக்கப்பட்டதால் கண்காணிப்பாளர் பணியிடத்திற்கு உயர் நிலையிலும் சமநிலையிலும் உள்ள பணியிடங்களுக்கு ஊதிய விகிதம் திருத்தியமைக்கப்பட்டபோது அதன் தொடர் விளைவாக பல பணியிடங்களின் ஊதிய விகிதங்களில் முரண்பாடு ஏற்பட்டது. அலுவலர் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியதால் ஏற்பட்ட ஊதிய முரண்பாடுகளைக் களைவதற்கு அரசு ஒரு நபர் குழுவை நியமித்து பார்வை இரண்டில் காணும் அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டது. அக்குழுவில் பெறப்பட்ட முறையீடுகளின் மீது அரசுக்கு தனது பரிந்துரைகளை அறிக்கையாக சமர்ப்பித்தது. அப்பரிந்துரைகளை அரசு முழுமையாக ஏற்றுக் கொண்டு ஆணைகளை வெளியிட்டது.

4. அமைச்சுப்பணி கண்காணிப்பாளருக்கு தர ஊதியம் ரூ.4800–ஆக மாற்றியமைக்கப்பட்டதால், அதற்கு உயர்நிலையிலிருந்த முதுநிலை வரைவு அலுவலருக்கு தர ஊதியம் ரூ.4900–ஆகவும் அதற்கு மேல்நிலையில் உள்ள உதவி பொறியாளர்களுக்கு தர ஊதியம்

ரூ.5400–ஆகவும் மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்படுவதால் உதவி பொறியாளர்களுக்கு கீழ்நிலையில் உள்ள சான்றிதழ் அல்லது பட்டயப் படிப்பு ஆகிய குறைந்த பட்ச கல்வி தகுதி பெற்றுள்ள முதுநிலை வரைவு அலுவலருக்கு உதவி பொறியாளர்களுக்கு இணையான ஊதிய விகிதமாகிய ரூ.9300 – 34800 + தர ஊதியம் ரூ.4700 என்ற திருத்திய ஊதிய விகிதம் அலுவலர் குழுவால் நிர்ணயிக்கப்பட்டதை ஒரு முரண்பாடு என ஒரு நபர் குழு கருதியது. மேலும் உதவி பொறியாளர்களைப் போன்றே உதவி மருத்துவர், உதவி மருத்துவ அலுவலர் (இந்திய மருத்துவம்), உதவி குற்றவியல் அரசு வழக்குரைஞர் போன்ற தொழில் முறை தகுதி பெற்றுள்ள பணியாளர்களுக்கு உயர் ஊதிய விகிதமான ரூ.15600–39100 + தர ஊதியம் ரூ.5400–ல் திருத்திய ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில் பொதுப்பணித் துறையிலுள்ள உதவிப் பொறியாளர்களுக்கு மட்டும் ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4700 என்ற திருத்திய ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்யப்படுவதைக் கருத்தில் கொண்டும் உதவி பொறியாளர்களுக்கான தொழில் முறைக்கல்வித் தகுதியை கவனத்தில் கொண்டும் ரூ.15600 – 39100 + தர ஊதியம் ரூ.5400 என்ற ஊதிய விகிதத்தை பரிந்துரைத்தது. அவ்வாறே அதன் உயர் பணியிடங்களான உதவி செயற் பொறியாளர் மற்றும் செயற் பொறியாளர்களின் ஊதிய விகிதங்களை முறையே ரூ.15600–39100 + தர ஊதியம் ரூ.5400–லிருந்து ரூ.15600–39100 + தர ஊதியம் ரூ.6600–ஆகவும் ரூ.15600–39100 + தர ஊதியம் ரூ.6600–லிருந்து ரூ.15600–39100 + தர ஊதியம் ரூ.7600–ஆகவும் 1–1–2006 முதல் கருத்தியலாகவும் 1–1–2007 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் திருத்தியமைத்து ஆணைகள் வெளியிடப்பட்டன. இந்த திருத்திய ஊதிய மாற்றத்தை வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள பொறியாளர்களுக்கும் நீட்டித்து வழங்கப்பட்டது.

5. இவ்வாணைகளைத் தொடர்ந்து வேளாண்மை அலுவலர்கள், வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள வேளாண்மைப் பொறியாளர்களைப் போலவே நான்கு ஆண்டுகள் படித்து பட்டம் பெற்றதை கருத்தில் கொண்டும் அவர்கள் நீண்ட காலமாக வேளாண்மை பொறியியல் துறையில் பணியாற்றும் பொறியாளர்களுக்கு இணையான ஊதியம் பெற்று வந்துள்ள நிலையினையும் கருத்தில் கொண்டு அதே ஊதிய விகிதத்தினை தங்களுக்கும் நீட்டித்து வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர். இதே போன்று கால்நடை பராமரிப்பு, மீன்வளம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மற்றும் மின் ஆய்வுத்துறை போன்ற துறைகளில் பணியாற்றும் கால்நடை உதவி மருத்துவர்கள், மீன்வளத்துறை ஆய்வாளர்கள், இளநிலை மின் ஆய்வாளர்கள் ஆகியோருக்கும் மேற்காணும் தொழில்முறை கல்வித் தகுதி நிர்ணயிக்கப்பட்டிருப்பதால் தங்களுக்கும் பொதுப்பணித்துறையில் பணியாற்றும் பொறியாளர்களுக்கு இணையாக தங்களுடைய ஊதிய விகிதத்தையும் திருத்தியமைக்குமாறு கோரிக்கை விடுத்தனர். எனவே, வேளாண்மை அலுவலர்கள், கால்நடை உதவி மருத்துவர்கள், தொழிற்சாலை ஆய்வாளர்கள், இளநிலை மின்ஆய்வாளர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையில் பணியாற்றும் பொறியாளர்கள் ஆகியோரின் ஊதிய விகிதமும் மற்றும் இப்பணியிடங்களிலிருந்து பதவி உயர்வு பெறும் பணியிடங்களுக்கும் உயர் ஊதிய விகிதம் அளித்து மேலே 21 முதல் 25 வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் ஆணைகள் வெளியிடப்பட்டன. இதன் விளைவாக கீழ்காணும் புதிய ஊதிய முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படும் துணை ஆட்சியர், உதவி இயக்குநர் (ஊராட்சி) மற்றும் காவல்துறை துணை கண்காணிப்பாளர் போன்ற முதல் தொகுதி (Group-I Services) பணியிடங்களுக்கு நேரடியாக தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர்களுக்கு இணையாக உதவி

பொறியாளர்களுக்கு ஊதிய விகிதம் திருத்தியமைக்கப்பட்டதால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களில் பணியாற்றும் அலுவலர்கள் தங்களை உதவி பொறியாளர்கள் மற்றும் வேளாண்மை அலுவலர்களின் உயர் பதவியான உதவி இயக்குநர் மற்றும் முதல் தொகுதி மூலம் தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர்களுக்கு சமமாக உள்ள நிலையில் அதன் கீழ்நிலையிலுள்ள உதவிப் பொறியாளர்களும், வேளாண்மை அலுவலர்களும் அதே ஊதிய விகிதத்தை பெற்று வருவது ஒரு முரண்பட்ட நிலை எனவும் அதனால் அவர்களுக்கு ஒரு நிலை மேல் உள்ள ஊதிய விகிதத்தில் தங்களின் ஊதிய விகிதத்தை திருத்தியமைக்கும்படியும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- வேளாண்மை, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறைகளிலுள்ள உதவி இயக்குநர் மற்றும் துணை இயக்குநர்களின் ஊதிய விகிதங்களை மாற்றியமைத்ததன் விளைவாக அப்பணியிடங்களுக்கு உயர் பதவியான இணை இயக்குநர்களுக்கு ஊதியக் கட்டு 3–லிருந்து (ரூ.15600–39100 + தர ஊதியம் ரூ.7600) ஊதியக் கட்டு 4–க்கு (ரூ.37400–67000 + தர ஊதியம் ரூ.8700) மாற்றியமைத்ததால் பழைய ஊதிய விகிதமான ரூ.12000–16500ல் மேற்கண்ட இணை இயக்குநர் பணியிடங்களுக்கு இணையாக இருந்த மாவட்ட வருவாய் அலுவலர்கள்/இணை இயக்குநர் (ஊரக வளர்ச்சி), காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் இதற்கு சரிநிகரில் உள்ள பணியிடங்களின் ஊதிய விகிதத்தில் முரண்பாடு ஏற்பட்டு வேளாண்மை இணை இயக்குநரைவிட கீழ்நிலை ஊதிய விகிதத்தில் பதவி வகிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் பல்வேறு துறைகளிலும் உள்ள இணை இயக்குநருக்கு நிகரான நிலையில் உள்ள அலுவலர்களும் கோரிக்கைகளை வைத்து வருவதுடன், போராட்டம் போன்ற அசாதாரண சூழல் நிர்வாகத்தில் ஏற்பட்டு வருகிறது.

- மேலும் உதவி பொறியாளர், வேளாண்மை அலுவலர்களுக்கு முறையே ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4700 மற்றும் ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4900-லிருந்து, ரூ.15600–39100+ தர ஊதியம் ரூ.5400 ஆக திருத்தியமைக்கப்பட்டதன் விளைவாக ஏற்கனவே கிட்டத்தட்ட ஒரே ஊதிய விகிதத்தில் இருந்த வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் வட்டாட்சியர் போன்ற பதவிகளில் உள்ள அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் உதவி பொறியாளர்களைக் காட்டிலும் குறைவான ஊதிய விகிதம் பெறும் முரண்பாடான நிலை எழுந்துள்ளது.

- வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டாட்சியர், காவல்துறை ஆய்வாளர், வனச்சரகர் போன்ற பணியிடங்களில் பணிபுரியும் அலுவலர்கள், உதவி பொறியாளர்/ வேளாண்மை அலுவலர் ஆகியோரின் ஊதிய விகிதத்திற்கு இணையான ஊதிய விகிதம் அளிக்கும்படி கோரிக்கை

விடுத்துள்ளனர். இக்கோரிக்கையினை ஏற்கும் பட்சத்தில் மேற்கூறப்பட்ட அலுவலர்களின் ஊதிய விகிதமானது அவ்வலுவலர்களின் உயர் பணியிடங்களான வருவாய் கோட்ட அலுவலர், உதவி இயக்குநர், காவல்துறை துணை கண்காணிப்பாளர் ஆகிய பதவிகளின் ஊதிய விகிதத்திற்கு இணையான நிலை ஏற்பட்டு ஒரு பெருத்த முரண்பாடு ஏற்படும் நிலை உள்ளது.

- பொதுப்பணித்துறையில் பணியாற்றும் உதவிப் பொறியாளர் மற்றும் வேளாண்மைத்துறையில் உள்ள வேளாண்மை அலுவலர்களை விட தங்களுக்கு ஒரு நிலை உயர்த்தி உயர் ஊதிய விகிதம் வழங்கும்படி துணை ஆட்சியர்கள், காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவி இயக்குநர் (ஊராட்சி) ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனை ஏற்கும்பட்சத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்கள், இணை இயக்குநர் (ஊரக வளர்ச்சி) மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோர்களது ஊதிய விகிதத்தை ஒரு நிலை மேலே அதாவது ஊதிய கட்டு நிலை 4-க்கு (ரூ.37400–67000 + தர ஊதியம் ரூ.8700) உயர்த்த வேண்டிய நிலை எழும்.

- மாவட்ட வருவாய் அலுவலர்கள், அரசுத் துணைச் செயலாளர்கள், இணை இயக்குநர் (ஊரக வளர்ச்சி), கூட்டுறவுச் சங்கங்களின் இணை பதிவாளர்கள், இணை ஆணையர் (இந்து சமய அறநிலையத்துறை) மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோர் வேளாண்மை / கால்நடை பராமரிப்பு / மீன்வளத்துறைகளில் பணி புரியும் இணை இயக்குநர்களுக்கு இணையான ஊதிய விதிகமான ரூ.37400–67000 + தர ஊதியம் ரூ.8700-ஐ வழங்குமாறு ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளனர். இக்கோரிக்கை ஏற்கப்படின் அரசின் பொதுவான பதவி ஏற்ற முறையில் பெறும் மாறுபாடு ஏற்படும் நிலை எழலாம்.

**6.** மேலே கூறப்பட்டுள்ள சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு ஒரு நபர் குழுவின் பரிந்துரைகள் மற்றும் அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்டுள்ள ஆணைகளினால் ஏற்பட்டுள்ள ஊதிய முரண்பாடுகளைக் களைந்து சீரமைக்கும் வகையில் அரசு விரிவாக ஆராய்ந்து இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களுக்கு ஊதிய விகித மாற்றங்களை செய்து அரசு ஆணையிடுகிறது.

**7.** மேற்கூறிய ஊதிய திருத்தங்களினால் நிலையிறக்கம் செய்யப்படும் பணியிடங்களுக்கு இவ்வாணை 1–1–2006 முதல் கருத்தியலாகவும் 1–3–2011 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் நடைமுறைப்படுத்தப்படும். அவ்வாறே தற்போது ஊதிய திருத்தம் அனுமதிக்கப்படும் பணியிடங்களான வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர், காவல் துறை ஆய்வாளர் மற்றும் வனச்சரகர் ஆகியோருக்கு இவ்வாணை 12–12–2007 முதல் கருத்தியலாகவும் 1–3–2011 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் நடைமுறைப்படுத்தப்படும். மேலும் ஊதிய திருத்தங்களினால் ஊதிய நிலையிறக்கம் செய்யப்பட்ட பணியிடங்களில் பணிபுரிபவர்களுக்கு ஏற்கெனவே உயர்த்தி வழங்கப்பட்ட ஊதியத்தில் மிகை ஊதியத் தொகை ஏதும் பிடித்தம் செய்யாமல் தள்ளுபடி செய்தும் அரசு ஆணையிடுகிறது. இந்த ஊதிய விகித ஏற்ற திருத்தத்தினால் மேலே 26–ல் படிக்கப்பட்டுள்ள

அரசாணையில் வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட தனி ஊதியமான ரூ.1000/– 1–3–2011 முதல் ரத்து செய்து ஆணையிடப்படுகிறது.

8. மேலே பத்தி 6–ல் மேற்கொள்ளப்பட்ட ஊதிய திருத்தங்களைத் தொடர்ந்து, பாதிப்பு ஏற்படும் அலுவலர்கள் அரசிடம் மேல் முறையீடு செய்ய வாய்ப்பளிக்கப்படுகிறது. எனவே இம்முறையீடுகள் மற்றும் ஏனைய ஊதிய மாற்றத்திற்கான முறையீடுகளை பரிசீலித்து உரிய தீர்வுகள் காணும் பொருட்டு நிதித்துறையில் தனியே ஒரு ஊதிய குறை தீர்க்கும் பிரிவு (Pay Grievance Redressal Cell) திரு இரா. தியாகராஜன், இ.ஆ.ப., சிறப்புச் செயலாளர், நிதித் துறை அவர்களின் தலைமையின் கீழ் அமைத்து அரசு ஆணையிடுகிறது. இக்குழு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து முறையீடுகளைப் பெற்று பரிசீலித்து நியாயமான கோரிக்கைகள் மீது உரிய பரிந்துரைகளை மூன்று மாத காலத்திற்குள் அரசுக்கு அறிக்கையாக அளிக்கும். இந்த பரிந்துரைகளை பரிசீலித்து உரிய ஆணைகள் வெளியிடப்படும்.

9. 1–1–2006–க்கு முன்னர் ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு அரசாணை எண்.235, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 1–6–2009 பத்தி 2(vi)–ன்படி உயர்நிலை ஊதியம் அனுமதிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் நிர்ணயம் செய்யப்பட்டவர்களுக்கு இவ்வாணையின்படி ஊதிய நிலையிறக்கம் செய்யப்பட்டுள்ள பணியிடங்களின் திருத்திய ஊதிய விகிதத்திற்கேற்ப ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் உடனடியாக திருத்தி நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று அனைத்து துறைத் தலைவர்கள், கருவூல அலுவலர்கள், சார்நிலைக் கருவூல அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. சண்முகம்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**<u>பெறுநர்</u>**

அனைத்து அரசு செயலாளர்கள், சென்னை–9 / 2.
அரசு முதன்மைச் செயலாளர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், வேளாண்மைத்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை, சென்னை–9.
தலைமைச் செயலகத்தின்அனைத்து துறைகள், சென்னை–9.
அனைத்து துறைத் தலைவர்கள்.
இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி, சென்னை–106.
ஆணையர், வேளாண்மைத்துறை, சென்னை–5.
இயக்குநர், தோட்டக்கலைத் துறை, சென்னை–5.
இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் விதைச் சான்று, கிண்டி, சென்னை–32.
இயக்குநர், மீன்வளத்துறை, சென்னை–6.
இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, சென்னை–6.
இயக்குநர், மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை, சென்னை–32.

இயக்குநர், பட்டுவளர்ச்சித் துறை, சேலம்–1.
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை–108.
போக்குவரத்துத் துறை ஆணையர், சென்னை–5.
சமூக நலத்துறை ஆணையர், சென்னை–5.
ஆணையர், மறுவாழ்வுத் துறை, சென்னை–5.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை, சென்னை–15.
தலைமைப் பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, சென்னை–35.
தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5.
முதன்மை தொழிற்சாலைகளின் ஆய்வாளர், சென்னை–5.
முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),
பொதுப்பணித் துறை, சென்னை–5.
முதன்மை மின் ஆய்வாளர், மின் ஆய்வுத் துறை, சென்னை–32.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–6.
மாநில கணக்குத் துறைத் தலைவர், கணக்குகள் (ம) உரிமைத் தொகை, சென்னை–18.
முதன்மை மாநில கணக்குத் தலைவர், (தணிக்கை–I), சென்னை–18.
முதன்மை மாநில கணக்குத் தலைவர், (தணிக்கை–II), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர், உடனிகழ் தணிக்கைக்குழு, சென்னை–9/மதுரை.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், (வடக்கு / தெற்கு / கிழக்கு), சென்னை–1 / 35 / 8.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், உயர் நீதிமன்றம், சென்னை–104.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், மதுரை–625 001.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / கருவூல அலுவலர்கள் / சார்நிலைக் கருவூல அலுவலர்கள்.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை–2.
மாண்புமிகு நிதியமைச்சரின்சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–2.
அரசு தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–2.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
வேளாண்மைத் துறை, சென்னை–9.
சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை, சென்னை–9.
கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை, சென்னை–9.
நிதி (வேளாண்மை / சுகாதாரம் / கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளம் /
ஊரக வளர்ச்சி / உள்துறை / சமூக நலம் / பொதுப்பணி–I / II)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

து. ஸ்ரீதர்
26/2/2011

**ஆராய்ச்சி அலுவலர்.**

# இணைப்பு

## ஊதிய விகிதங்கள் திருத்தி அமைக்கப்படும் துறைவாரியான பணியிடங்களின் விவரம்

| வ. எண் | துறை மற்றும் பணியிடத்தின் பெயர் | 1–1–2006–க்கு முந்தைய ஊதிய விகிதம் | நிகரான திருத்திய ஊதிய விகிதம் + தர ஊதியம் | தற்போதைய திருத்திய ஊதிய விகிதம் + தர ஊதியம் | திருத்தி அமைக்கப்படும் ஊதிய விகிதம் + தர ஊதியம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| I | வேளாண்மைத்துறை | | | | |
| 1. | வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர் | 6500—11100 | 9300—34800 + 4700 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5100 |
| 2. | உதவி இயக்குநர் / தோட்டக்கலை உதவி இயக்குநர் | 8000—13500 | 15600—39100 + 5400 | 15600—39100 + 6600 | 15600—39100 + 5400 |
| 3. | துணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் | 10000—15200 | 15600—39100 + 6600 | 15600—39100 + 7600 | 15600—39100 + 6600 |
| 4. | இணை இயக்குநர் / தோட்டக்கலை இணை இயக்குநர் | 12000—16500 | 15600—39100 + 7600 | 37400—67000 + 8700 | 15600—39100 + 7600 |
| II | வேளாண்மை பொறியியல் துறை | | | | |
| 5. | உதவி பொறியாளர் | 6500—11100 | 9300—34800 + 4700 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5100 |
| 6. | உதவி செயற்பொறியாளர் | 8000—13500 | 15600—39100 + 5400 | 15600—39100 + 6600 | 15600—39100 + 5400 |
| 7. | செயற் பொறியாளர் | 10000—15200 | 15600—39100 + 6600 | 15600—39100 + 7600 | 15600—39100 + 6600 |
| III | கால்நடை பராமரிப்புத் துறை | | | | |
| 8. | கால்நடை உதவி மருத்துவர் / ஆராய்ச்சி உதவியாளர் | 6500—11100 | 9300—34800 + 4700 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5100 |
| 9. | உதவி இயக்குநர் | 8000—13500 | 15600—39100 + 5400 | 15600—39100 + 6600 | 15600—39100 + 5400 |
| 10. | துணை இயக்குநர் | 10000—15200 | 15600—39100 + 6600 | 15600—39100 + 7600 | 15600—39100 + 6600 |
| 11. | இணை இயக்குநர் | 12000—16500 | 15600—39100 + 7600 | 37400—67000 + 8700 | 15600—39100 + 7600 |
| IV | மீன்வளத்துறை | | | | |
| 12. | மீன் ஆய்வாளர் / ஆராய்ச்சி உதவியாளர் | 6500—11100 | 9300—34800 + 4700 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5100 |
| 13. | உதவி இயக்குநர் | 8000—13500 | 15600—39100 + 5400 | 15600—39100 + 6600 | 15600—39100 + 5400 |
| 14. | துணை இயக்குநர் | 10000—15200 | 15600—39100 + 6600 | 15600—39100 + 7600 | 15600—39100 + 6600 |
| 15. | இணை இயக்குநர் | 12000—16500 | 15600—39100 + 7600 | 37400—67000 + 8700 | 15600—39100 + 7600 |
| V | நெடுஞ்சாலைத்துறை | | | | |
| 16. | உதவி பொறியாளர் / மின்னனு பொறியாளர் | 6500—11100 | 9300—34800 + 4700 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5100 |
| 17. | உதவி கோட்டப் பொறியாளர் | 8000—13500 | 15600—39100 + 5400 | 15600—39100 + 6600 | 15600—39100 + 5400 |

| வ. எண் | துறை மற்றும் பணியிடத்தின் பெயர் | 1–1–2006–க்கு முந்தைய ஊதிய விகிதம் | நிகரான திருத்திய ஊதிய விகிதம் + தர ஊதியம் | தற்போதைய திருத்திய ஊதிய விகிதம் + தர ஊதியம் | திருத்தி அமைக்கப்படும் ஊதிய விகிதம் + தர ஊதியம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 18. | கோட்டப் பொறியாளர் | 10000—15200 | 15600—39100 + 6600 | 15600—39100 + 7600 | 15600—39100 + 6600 |
| 19. | தலைமை வரைவு அலுவலர் | 9100—14050 | 15600—39100 + 5700 | 15600—39100 + 6600 | 15600—39100 + 5700 |
| VI | **ஊரக வளர்ச்சித்துறை** | | | | |
| 20. | உதவி பொறியாளர் | 6500—11100 | 9300—34800 + 4700 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5100 |
| 21. | உதவி செயற்பொறியாளர் | 8000—13500 | 15600—39100 + 5400 | 15600—39100 + 6600 | 15600—39100 + 5400 |
| 22. | செயற் பொறியாளர் | 10000—15200 | 15600—39100 + 6600 | 15600—39100 + 7600 | 15600—39100 + 6600 |
| 23. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 7500—12000 | 9300—34800 + 4900 | 9300—34800 + 4900 | 15600—39100 + 5100 |
| VII | **தொழில் மற்றும் வணிகத் துறை** | | | | |
| 24. | உதவிப் பொறியாளர் (தொழில்) / சோதனையாளர்(Tester) / சோதனையிடும் உதவியாளர் (Testing Asst.) / தொழில்நுட்ப உதவியாளர் (Tech. Asst.) / ஆய்வாளர் (தரக்கட்டுப்பாடு) | 6500—11100 | 9300—34800 + 4700 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5100 |
| VIII | **தொழிற்சாலை ஆய்வகத் துறை** | | | | |
| 25. | உதவி தொழிற்கூட ஆய்வாளர் | 6500—11100 | 9300—34800 + 4700 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5100 |
| 26. | தொழிற்கூட ஆய்வாளர் | 8000—13500 | 15600—39100 + 5400 | 15600—39100 + 6600 | 15600—39100 + 5400 |
| 27. | துணை தலைமை தொழிற்கூட ஆய்வாளர் | 10000—15200 | 15600—39100 + 6600 | 15600—39100 + 7600 | 15600—39100 + 6600 |
| IX | **மாநில சுகாதார போக்குவரத்துத் துறை** | | | | |
| 28. | உதவி பொறியாளர் / பணிமனை கண்காணிப்பாளர் | 6500—11100 | 9300—34800 + 4700 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5100 |
| 29. | பொது முதலாள் | 5500—9000 | 9300—34800 + 4400 | 9300—34800 + 4400 | 15600—39100 + 5100 |
| 30. | மெட்டீரியல் மேனேஜர், தொழில்நுட்ப அலுவலர், உந்தூர்திப் பொறியாளர் (Automobile Engineer) | 8000—13500 | 15600—39100 + 5400 | 15600—39100 + 6600 | 15600—39100 + 5400 |
| X | **மோட்டார் வாகன பராமரிப்புத்துறை** | | | | |
| 31. | தொழில்நுட்ப உதவியாளர் / பொது முதலாள் | 6500—11100 | 9300—34800 + 4700 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5100 |
| 32. | உந்தூர்திப் பொறியாளர் (Automobile Engineer) | 8000—13500 | 15600—39100 + 5400 | 15600—39100 + 6600 | 15600—39100 + 5400 |

| வ. எண் | துறை மற்றும் பணியிடத்தின் பெயர் | 1–1–2006–க்கு முந்தைய ஊதிய விகிதம் | நிகரான திருத்திய ஊதிய விகிதம் + தர ஊதியம் | தற்போதைய திருத்திய ஊதிய விகிதம் + தர ஊதியம் | திருத்தி அமைக்கப்படும் ஊதிய விகிதம் + தர ஊதியம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| XI | <u>பட்டுவளர்ச்சித்துறை</u> | | | | |
| 33. | நிருவாக அலுவலர் | 6500—10500 | 9300—34800 + 4600 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5100 |
| XII | <u>பொதுப்பணித்துறை</u> | | | | |
| 34. | உதவி பொறியாளர் | 6500—11100 | 9300—34800 + 4700 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5100 |
| 35. | உதவி செயற்பொறியாளர் | 8000—13500 | 15600—39100 + 5400 | 15600—39100 + 6600 | 15600—39100 + 5400 |
| 36. | செயற் பொறியாளர் | 10000—15200 | 15600—39100 + 6600 | 15600—39100 + 7600 | 15600—39100 + 6600 |
| 37. | தலைமை வரைவு அலுவலர் | 9100—14050 | 15600—39100 +5700 | 15600—39100 +6600 | 15600—39100 +5700 |
| XIII | <u>மாநில போக்குவரத்துத் துறை</u> | | | | |
| 38. | வட்டார போக்குவரத்து அலுவலர் | 8000—13500 | 15600—39100 + 5400 | 15600—39100 + 6600 | 15600—39100 + 5400 |
| 39. | வட்டார போக்குவரத்து அலுவலரின் தனி உதவியாளர் / மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை –I | 6500—10500 | 9300—34800 + 4600 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5100 |
| XIV | <u>மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு ஆணையரகம்</u> | | | | |
| 40. | மாவட்ட மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு அலுவலர் | 6500—10500 | 9300—34800 + 4600 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5100 |
| XV | <u>பேரூராட்சிகள்</u> | | | | |
| 41. | உதவி பொறியாளர் | 6500—11100 | 9300—34800 + 4700 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5100 |
| 42. | உதவி செயற் பொறியாளர் | 8000—13500 | 15600—39100 + 5400 | 15600—39100 + 6600 | 15600—39100 + 5400 |
| 43. | செயற் பொறியாளர் | 10000—15200 | 15600—39100 + 6600 | 15600—39100 + 7600 | 15600—39100 + 6600 |
| XVI | <u>மின் ஆய்வுத்துறை</u> | | | | |
| 44. | இளநிலை மின் ஆய்வாளர் | 6500—11100 | 9300—34800 + 4700 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5100 |
| 45. | உதவி மின் ஆய்வாளர் | 8000—13500 | 15600—39100 + 5400 | 15600—39100 + 6600 | 15600—39100 + 5400 |
| 46. | மின் ஆய்வாளர் | 10000—15200 | 15600—39100 + 6600 | 15600—39100 + 7600 | 15600—39100 + 6600 |
| XVII | <u>சென்னை மாநகராட்சி</u> | | | | |
| 47. | உதவி பொறியாளர் | 6500—11100 | 9300—34800 + 4700 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5100 |
| 48. | உதவி செயற்பொறியாளர் | 8000—13500 | 15600—39100 + 5400 | 15600—39100 + 6600 | 15600—39100 + 5400 |
| 49. | செயற் பொறியாளர் | 10000—15200 | 15600—39100 + 6600 | 15600—39100 + 7600 | 15600—39100 + 6600 |

| வ. எண் | துறை மற்றும் பணியிடத்தின் பெயர் | 1–1–2006–க்கு முந்தைய ஊதிய விகிதம் | நிகரான திருத்திய ஊதிய விகிதம் + தர ஊதியம் | தற்போதைய திருத்திய ஊதிய விகிதம் + தர ஊதியம் | திருத்தி அமைக்கப்படும் ஊதிய விகிதம் + தர ஊதியம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 50. | கண்காணிப்பாளர்–இறைச்சிக்கூடம்/உதவி கண்காணிப்பாளர்–இறைச்சிக்கூடம் /கால்நடைஉதவி மருத்துவர் | 6500—11100 | 9300—34800 + 4700 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5100 |
| 51. | கால்நடை அலுவலர் | 8000—13500 | 15600—39100 + 5400 | 15600—39100 + 5700 | 15600—39100 + 5400 |
| **XVIII** | **<u>இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை</u>** | | | | |
| 52. | மாவட்ட சித்த மருத்துவ அலுவலர், விரிவுரையாளர், மருத்துவ அலுவலர், உள்ளுறை மருத்துவ அலுவலர், கூர்ந்தாய்வு மருத்துவ அலுவலர் | 9100—14050 | 15600—39100 + 5700 | 15600—39100 + 6600 | 15600—39100 + 5700 |
| 53. | துணை இயக்குநர் (புற்றுநோய் (ம) எயிட்ஸ்) / இயக்குநர் ( வர்மம்) / மருந்தக கண்காணிப்பாளர்/ பேராசிரியர் / ரீடர்/ கண்காணிப்பாளர் மற்றும் தனி அலுவலர் | 10000—15200 | 15600—39100 + 6600 | 15600—39100 + 7600 | 15600—39100 + 6600 |
| 54. | இணை இயக்குநர் / முதல்வர் | 12000—16500 | 15600—39100 + 7600 | 37400—67000 + 8700 | 15600—39100 + 7600 |
| **XIX** | **<u>வருவாய்த் துறை</u>** | | | | |
| 55. | வட்டாட்சியர் | 7500—12000 | 9300—34800 + 4900 | 9300—34800 + 4900 | 15600—39100 + 5100 |
| **XX** | **<u>காவல் துறை</u>** | | | | |
| 56. | ஆய்வாளர் | 7500—12000 | 9300—34800 + 4900 | 9300—34800 + 4900 | 15600—39100 + 5100 |
| **XXI** | **<u>வனத்துறை</u>** | | | | |
| 57. | வனச்சரகர்கள் | 6500—10500 | 9300—34800 + 4600 | 9300—34800 + 4900 | 15600—39100 + 5100 |

**க. சண்முகம்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**/உண்மை நகல்/**

து. ஸ்ரீதர்
26/2/2011

**ஆராய்ச்சி அலுவலர்.**